Pg. 6 Dt 6/09/19

DT NEXT



# Kurangani treks resume with riders

*Kozhukumalai Hills route where 23 trekkers died in forest fire last year continues to remain closed*



**A view of the forest fire in the Kurangani range (File photo)**

■ CS KOTTESWARAN

**CHENNAI: The Forest Department on Thursday resumed trekking in the infamous Kurangani trek route in Theni forest division. However, the route leading to Kozhukumalai Hills where 23 trekkers died in a forest fire last year is closed as unauthorised.**

"There are applications from the trekkers since last month and from Thursday they are processed as per the 2018 trek norms formulated by the state Forest Department," S Gautham, district forest officer, Theni told *DT Next*.

There are six ranges in Theni division manned by 32 forest guards and 12 foresters. All the vacancies have been filled and a few foresters are now under training. For every fifth person, a trained ecotourist guide will accompany the trekkers and the foresters will supervise.

Aspiring trekkers can also directly contact the Theni forest office for details and charges will be collected as per the government orders, the DFO said confirming that the Kozhukumalai route is banned for treks. The Forest Department had also roped in 18 local residents as ecotourism watchers on temporary basis to assist the department, DFO said.

According to Theni foresters, the state is yet to open the online booking facility and the number of applications will increase when the bookings are made online. In Tamil Nadu, after the new policy an easy trek per person cost Rs 200, Rs 350 for medium trek and Rs 500 for tough treks.

The Kurangani trek trail is about 11.4 kms with moderate and easy trek routes. From Kurangani a person can reach Kerala's pristine Pampadum Shola by trekking for 4 km, but the same via road is about 100 km via Munnar. As Kurangani is mostly free from elephant movements, trekkers prefer the route.

According to Forest Department insiders, tough restrictions, payment for every trekker had affected the trekking activity. Now with the Theni forest division coming out with the notification, safe treks will be possible in other forest divisions.

District forest officers have been permitting only those keen on it. More than 90 per cent of trek permissions that came after Kurangani incident were rejected till March 2019.

# Delhi Zoo's last cape buffalo dies after consuming plastic bag



**NEW DELHI:** The Delhi zoo on Thursday ordered an inquiry after its last cape buffalo died allegedly due to the consumption of a plastic bag. The cape buffalo, a species found only in Africa, died on August 27. Veterinary Officer Abhijit Bhawal who conducted the postmortem found a plastic-like material in the stomach of the animal, an official said. The zoo had two cape buffaloes. One of them died in February 2017. An inquiry has been ordered and Former joint director AK Bhowmik will lead the probe.

Pg. 12 DT 06/09/18

# Tanzania seizes ivory tusks equivalent to 117 elephants killed

**DAR ES SALAAM: Tanzania has seized ivory tusks equivalent to killing at least 117 elephants, its Tourism Minister said, part of its drive to stamp out organised criminal networks involved in years of industrial-scale poaching.**

The elephant population in Tanzania, famed for its wildlife reserves, shrank from 110,000 in 2009 to barely 43,000 in 2014, according to a 2015 census, with conservation groups blaming rampant poaching. The government says numbers have now started to recover.

Demand for ivory from Asian countries such as China and Vietnam, where it is turned into jewels and ornaments, has driven the surge in poaching across Africa.

Hamisi Kigwangalla, Minister for Natural Resources and Tourism, said on his Twitter account late on Wednesday the ivory was recovered after authorities arrested suspected "hardcore" poacher Hassan Shaban Likwema, also known by the alias Hassan Nyoni.





**(File photo) Elephants at Singita Grumeti Game Reserve, (inset) seized ivory tusks**

"The arrest of Nyoni has brought us to a stage where we can say we have taken into custody all the hardcore poachers on our wanted list, except for a few who have left the country," Kigwangalla said.

"Nyoni and his accomplices' consignment is worth 4 billion shillings ($1.74 million) and involved the killing of 117 elephants going back to 2015 and earlier," he said.

Neither Likwema nor his accomplices were immediately reachable for comment. Pictures Kigwangalla posted on his Twitter account showed him inspecting a row consisting of 75 whole tusks and some 338 smaller pieces of ivory.

The government said in July its anti-poaching efforts had led to a recovery in elephant numbers, which rose to over 60,000 at present.

DT NEXT

# Temple to construct a new home for Kodhai

Pg. 5 of 06/09/15. THE HINDU

## *Move comes after court direction; enclosure will give elephant space to move around*

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Kodhai, the elephant of the Sri Adhikesava Perumal- Sri Bashyakarar temple in Sriperumbudur, is moving to a new spacious enclosure in the middle of a grove that belongs to the temple.

Following a court direction and taking into consideration the fact that the 21-year-old elephant likes to move around, the temple authorities are now planning to construct a new enclosure for it in the middle of a grove. "We will get it up within a month, since there is no need for a floor. We only need columns, a roof and grill gates that will let in plenty of light and air," explained a temple official. It is to be constructed at a cost of ₹20 lakh on a 9m x 6m x 6m space, along with a borewell for its water needs. The enclosure will also help it with the stiffness in its right hind leg, for which Kodhai is undergoing treatment. K. Sridhar, veterinary surgeon and radiologist, said the pain that comes off and on could be due to a congenital deformity. "After an orthopaedic examination I located the spotted where the pain was and gave medication. We will continue the treatment after another examination. The elephant is otherwise well maintained," he said. Dr. Sridhar said the elephant needs to walk for the foot pads to remain soft, without getting cracks or getting worn out.

When Kodhai was brought out of its present enclosure, it unlatched the grill by itself and walked out with quick steps. But after walking around for a bit and having some sugarcane, when it was time to return inside, the elephant took its time to go back. The elephant was born in November 1998 in Assam, and brought to the temple from Thrissur in Kerala in September, 2001.



The elephant was brought from Kerala. •K.V. SRINIVASAN



# DOUBLE-HEADED

A rare two-headed snake on the palm of a person's hand in Tabanan, on the resort island of Bali, Indonesia | AFP

THE NEW INDIAN EXPRESS

Pg-20 Dt 06/09/18.



### திருச்சி விமான நிலையத்தில்

# சீனாவில் இருந்து கடத்தி வந்த 2 ஆயிரம் அரியவகை ஆமைகள் பறிமுதல்

## சென்னையை சேர்ந்தவர் சிக்கினார்

திருச்சி, செப்.6-

திருச்சி விமான நிலையத்துக்கு கோலாலம்பூரில் இருந்து ஒரு விமானம் நேற்று வந்தது. அதில் வந்த பயணிகள் மற்றும் அவர்களுடைய உடைமைகளை மத்திய வான் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது அந்த விமானத்தில் இருந்து இறங்கிய சென்னையை சேர்ந்த பீர் முகமது முஸ்தபா என்பவர், அவருடைய உடைமைகளுடன் நடந்து வந்தார்.

அவருடைய நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த அதிகாரிகள், அவரை நிறுத்தி விசாரித்தனர். அப்போது அவர், சீனாவில் இருந்து கோலாலம்பூர் வழியாக திருச்சி வந்தது தெரிய வந்தது. மேலும் அவர், பேனா, பென்சில் உள்ளிட்டவற்றை எடுத்து வருவதாக கூறினார். அதிகாரிகளிடம் அவர் முன்னுக்குப்பின் முரணாக பேசியதால், அவரது உடைமைகளை சோதனை செய்தனர்.

அப்போது அவர் 8 அட்டைப்பெட்டிகளில் உயிரோடு இருந்த 2 ஆயிரம் அரியவகை ஆமைகளை மறைத்து, கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து அதிகாரிகள், வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் வனத்துறையினர் அங்கு வந்து, அந்த ஆமைகளை ஆய்வு செய்தனர்.

அவை சீனாவில் வளரக்கூடிய அரியவகை ஆமைகள் என்றும், அங்கிருந்து அவை கடத்தி வரப்பட்டதாகவும், அவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து 2 ஆயிரம் ஆமைகளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் நமது நாட்டின் சீதோஷ்ண நிலை, அந்த ஆமைகளுக்கு ஏற்றதல்ல என்பதால் அவற்றை சீன நாட்டிற்கே திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டது. பீர் முகமது முஸ்தபாவிடம் விசாரணை நடந்து வருகிறது.

Pg. 5 D4 05/09/18

மாலை முரசு

மாலை முரசு

## கடையத்தில்

# விஷம் வைத்து சிறுத்தை சாகடிப்பு விஷமிகள் யார்?

நெல்லை, செப். 5-

நெல்லை மாவட்டம் கடையம் மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது தோரணமலை பகுதி. இங்கு புகழ்பெற்ற முருகன் கோவில் அமைந்துள்ளது.

முண்டந்துறை புலிகள் காப்பக வனப்பகுதிகள் சார்ந்த பகுதிகள் என்பதால் மான், மிளா, கரடி, செந்நாய் போன்ற வனவிலங்குகள் அவ்வப்போது ஊருக்குள் புகுவதும், வனத்துறையினரை அழைத்துவிரட்டுவதும் வாடிக்கையான நிகழ்வு.

அவ்வப்போது கடையம் அருகே கடனா அணைக்கட்டு பகுதியில் கீழ பெத்தான்பிள்ளை குடியிருப்பு பகுதிக்குள் சிறுத்தை புகுந்து ஆடு, நாய் போன்றவற்றை இழுத்துச்சென்று இரையாக்குவது தொடர்ச்சியாக நடைபெற்றநிலையில் வனத்துறையினர் கூண்டு வைத்து சிறுத்தையை பிடித்து அடர்ந்த வனப்பகுதிக்குள் விட்டு வந்தனர். கடந்த சில நாட்களாக அந்த பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் பெரியஅளவில் இல்லையென்கின்றனர் பொதுமக்கள்.

இந்த நிலையில் இன்று தோரணமலைப் பகுதியில் ஒரு சிறுத்தை இறந்த நிலையில் கிடந்துள்ளது.

பாம்பு கடித்து சிறுத்தை இறந்திருக்கலாம் என கூறப்படும் நிலையில் விஷம் வைத்துவிஷமிகள் வேண்டுமென்றே சிறுத்தையை கொன்றிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

முயல் வேட்டை, மான், காட்டுப்பன்றி வேட்டை போன்றவற்றை தடுப்பதற்காக பொதுமக்களிடம் இருந்து விலை உயர்ந்த ராஜபாளையம், சிப்பி பாறை, கன்னி இன நாய்களை வனத்துறை ரேஞ்சர் நெல்லைநாயகம் பிள்ளை பறிமுதல் செய்துள்ளார்.

இந்த ஆத்திரத்தில் யாரேனும் வேண்டுமென்றேசிறுத்தையை விஷம் வைத்து கொன்று இருக்கலாம் என கூறப்படுகிறதுசிறுத்தையின் உடலைபிரேதபரிசோதனை செய்த பிறகே அது எப்படி இறந்தது என தெரியவரும் என வனத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வழக்கமாக இதுபோன்று மர்மமான முறையில் வனவிலங்குகள்இறக்கநேரிட்டால் பிரேத பரிசோதனை செய்து அந்தவிலங்குஇறந்ததற்கான உண்மைக்காரணம் தொடர்பான அறிக்கை கிடைக்கும்வரை எரியூட்ட மாட்டார்கள்.

ஆனால் தற்போது இந்த சிறுத்தைப்புலி பிரேத பரிசோதனை செய்து உடனடியாக எரிக்கப்பட்டிருப்பது அதன் மரணத்தில் சந்தேகத்தைவலுப்படுத்தியுள்ளது.

காப்புக்காடு பகுதிகளில் போதிய வனத்துறை கண்காணிப்புஇல்லாததும், புலிகள் காப்பகம் என்ற வரையறையைநினைவில்கொள்ளாமல்பொதுமக்களைதாறுமாறாக அனுமதிப்பதுமே இதுபோன்ற சமூகவிரோத வனவிரோத சம்பவங்களுக்கு காரணம் என பசுமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



கொல்லப்பட்ட சிறுத்தை.

பைக்காரா பகுதியில்

தினகரன்

# குடியிருப்புக்குள் புகுந்த சிறுத்தை

## நாய்களை கொன்ற வீடியோ வைரல்

ஊட்டி, செப்.6: நீலகிரி மாவட்டத்தில், சிறுத்தைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மக்கள் வாழும் பகுதிக்கு வரும் சிறுத்தை கால்நடைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகளை தூக்கி செல்வதை வழக்கமாக கொண்டுள்ளன. இந்நிலையில், ஊட்டி அருகே பைக்காரா பகுதியில் மின் ஊழியர் பாபுவின் வீடு காய்கறி தோட்டங்களுக்கு நடுவே உள்ளது. இங்கு சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மேலும், பாதுகாப்புக்காக பாபு 3 ஜெர்மன் செப்பர்டு நாய்களை வளர்த்து வந்தார்.





நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இவரது வீட்டில் வினோதமான சத்தம் கேட்டு பாபு மற்றும் அவரது மனைவி வந்து பார்த்துள்ளனர். அப்போது, ஒரு சிறுத்தை வீட்டின் காம்பவுண்டுக்குள் வந்து மூன்று நாய்களையும் அடித்து கொன்றதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். நாய்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்ததால், அவைகளை தூக்கிச் செல்ல முடியவில்லை. இதனால், சிறுத்தை எங்காவது பதுங்கியுள்ளதா என தெரியவில்லை.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த வனத்துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். மேலும், அப்பகுதியில் முகாமிட்டு சிறுத்தையை பிடிக்க கூண்டுகள் வைப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர். நாய்களை சிறுத்தை தாக்கி கொன்ற சம்பவம் அங்குள்ள சிசிடிவியில் பதிவாகியுள்ளது. இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

# தமிழகத்துக்கு வலசை வர தொடங்கிய 'வெளிநாட்டு விருந்தாளி'

## மதுரையில் முதன்முறையாக தென்பட்ட 'ஐரோப்பா கரும் நாரை'

ஒய்.ஆண்டனி செல்வராஜ்

மதுரை

தமிழகத்துக்கு வெளிநாட்டு விருந்தாளியாக வெளிநாட்டுப் பறவைகள் வலசை வரத்தொடங்கி உள்ளன. இதில், மதுரையில் முதன்முறையாக ஐரோப்பாவை தாயகமாகக் கொண்ட கரும் நாரை பறவை தென்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பறவைகள் வலசைக் காலம் செப்டம்பரில் தொடங்கி மார்ச் வரை நீடிக்கும். உலகெங்கும் வடபகுதிகளில் கடும் குளிர்காலம் தொடங்கியதன் அறிகுறியாக தற்போது வெளிநாட்டுப் பறவைகள் தமிழகத்துக்கு வலசை வரத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக இந்தப் பறவைகள் தமிழகத்தின் தென் பகுதிகளுக்கு அதிகம் வலசை வருகின்றன. எப்போதுமே இந்தப் பறவைகள், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களுக்கு அதிக அளவு வரும்.

மதுரை மாவட்டத்துக்கு இந்த ஆண்டு மிக அரிதாக மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பாவை தாயகமாகக் கொண்ட கரும் நாரை (Black Stork) எனும் பறவை ஒன்று வலசை வந்துள்ளது. முதன் முதலாக இந்தப் பறவை, மதுரை நீர்நிலைகள், வனப்பகுதிகளில் தென்பட்டது.





முதன்முறையாக மதுரைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பாவை தாயகமாகக் கொண்ட கரும் நாரை.

இப்பறவையை மதுரை அமெரிக்கன் கல்லூரியின் மாணவர்கள் கிஷோர்குமார், கணபதி இருவரும் சோழவந்தான் வனப் பகுதி அருகே உள்ள நீர்த்தேக்கத்தில் கண்டறிந்தனர். பின்னர் இதை மதுரையின் பறவை ஆர்வலர்கள் சாம்சன், தணிகைவேல், ரவீந்திரன் ஆகியோரும் உறுதி செய்தனர்.

### இனப்பெருக்கம் செய்ய...

சோழவந்தான் வனப்பகுதியில் கரும் நாரையை புகைப்படம் எடுத்த பறவை ஆர்வலர் ரவீந்திரன் கூறியதாவது:

கரும் நாரைகள், செங்கால் நாரையின் தூரத்து உறவே. இவை பெரும்பாலும் மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பிய தேசங்களில் இனப்பெருக்கம் செய்து வாழ்ந்து வருகின்றன. அடர்ந்த வனப்பகுதிகளை அடுத்த நீர்நிலைகளைச் சார்ந்து வாழும் இவைகள், உயர்ந்த மரங்களிலும் சிலவேளை மலைகளில் உள்ள பாறைகளின் ஊடே கூடு கட்டி வாழ்கின்றன.

குளங்களில் உள்ள மீன்களையும், புல்வெளிகளில் உள்ள வெட்டுக்கிளி போன்ற பூச்சி இனங்களையும் உணவாக உட்கொள்ளும் இப்பறவைகள், குளிர்காலம் தொடங்கும் பொழுது பெரும்பாலான ஐரோப்பியப் பகுதியை விட்டு ஆப்பிரிக்க தேசங்களுக்கு வலசை சென்று விடுகின்றன. கிழக்கு ஐரோப்பா, மத்திய ஆசியாவைச் சேர்ந்த கரும் நாரைகள் மட்டுமே இந்தியாவுக்கு வலசை வருகின்றன.

### ஆண்டுக்கு ஆண்டு குறைவு

கடந்த பத்தாண்டுகளில் இந்த வகை கரும் நாரைகளின் வரவு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருவது சூழலியல் ஆர்வலர்களையும், பறவை ஆர்வலர்களையும் கவலை கொள்ளச் செய்துள்ளது. இதற்கு இந்தியப் பகுதிகளில் இப்போது பரவலாக மாறி வரும் தட்பவெப்ப நிலையும், நீர் நிலைகள் வறண்டு போவதும்கூட காரணமாக இருக்கலாம்.

மேலும் இப்போது நீர் பரப்புகள் பலவும் மனிதர்களால் ஆக்கிரமிக்கப்படுவதால் இதுபோன்ற பறவைகள் அவ்விடத்தில் வாழ விரும்புவது இல்லை. இத்தகைய சூழலில் தற்போது வலசைக் காலம் தொடங்கியவுடன் ஒரு அரிய பறவையை மதுரை மாவட்டத்தில் கண்ட மகிழ்ச்சியில் உள்ளோம் என்றார்.

# தடை!

- சென்னை சி.எல்.ஆர்.ஐ., வளாகத்தில் வனத்துறைக்கு...
- 10 நாட்களில் இரண்டு மான்கள் இறப்பால் புது சர்ச்சை
- மற்றவற்றை பாதுகாக்கும் அரசு உத்தரவு கேள்விக்குறி

Pg. 1 Dt 06/09/18

தினமலர்

சென்னை, செப். 6–

**சென்னை, மத்திய தோல் ஆராய்ச்சி நிலையமான, சி.எல்.ஆர்.ஐ., வளாகத்தில், 10 நாட்களில், இரண்டு மான்கள் இறந்தது, சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அங்குள்ள மற்ற மான்களை பிடித்து, அடர்த்தியான காடுகளில் விட, அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், வளாகத்தில் நுழைய, வனத்துறைக்கு, சி.எல்.ஆர்.ஐ., நிர்வாகம் தடை விதித்துள்ளது. இது, வன உயிரின ஆர்வலர்கள் மத்தியில், கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

கிண்டி தேசிய பூங்கா, கவர்னர் மாளிகை, ஐ.ஐ.டி., மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம், அண்ணா பல்கலை மற்றும் தரமணி, வேளச்சேரி பகுதிகளில், 600க்கும் மேற்பட்ட மான்கள் உள்ளன.

இவற்றில், தேசிய பூங்கா மற்றும் கவர்னர் மாளிகை வளாகத்தில் உள்ள மான்கள், பாதுகாப்பாக உள்ளன.

இதர பகுதியில் வளரும் மான்கள், முக்கிய உணவான புல் கிடைக்காமல், பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்களை உண்டு, ஆபத்தின் விளிம்பில் உள்ளன. இதில், பல மான்கள் இறந்துள்ளன.

இறந்த மான்களை, இந்த நிர்வாகங்கள், சத்தமின்றி, வளாகத்திலேயே புதைத்து விடுகின்றன.

இந்நிலையில், இயற்கையான உணவு கிடைக்காத மான்களை பிடித்து, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் நெல்லை மாவட்டம் முண்டந்துறையில் உள்ள, அடர்த்தியான காடுகளில் விட, வனத்துறை முடிவு செய்தது.

முதற்கட்டமாக, 150 ஏக்கருக்கு மேல் பரப்பு உடைய, மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள, 70 மான்களை பிடிக்க, பிப்ரவரியில், அரசு உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து, 3 லட்சம் ரூபாய் செலவில், 5 ஏக்கர் பரப்பில், 9 அடி உயரத்தில், வனத்துறை சார்பில், வலை கட்டப்பட்டது. அதில், புல், காய்கறி வகைகளை வைத்து, மான்களை பிடிக்க, முடிவு செய்யப்பட்டது.

ஆனால், மத்திய தோல் ஆராய்ச்சி நிலைய நிர்வாகம், மான்களை பிடிக்க, எதிர்ப்பு தெரிவித்தது. இது, வன உயிரின ஆர்வலர்கள் மத்தியில், கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், 10 நாட்களுக்கு முன், அதே வளாகத்தில் நடைபெறும் கட்டுமான பணிக்காக, கட்டப்பட்டிருந்த இரும்பு கம்பியில் சிக்கி, இரண்டு மான்கள் படுகாயமடைந்து, இறந்தன.

இதையடுத்து, இதர மான்களை பாதுகாப்பாக பிடிக்க, வனத்துறை முடிவு செய்தது. ஆனால், வனத்துறை அதிகாரிகள் உள்ளே நுழைய, மத்திய தோல் ஆராய்ச்சி நிலைய நிர்வாகம், திடீர் தடை விதித்துள்ளது.

இதனால், ஆபத்தின் விளிம்பில் உள்ள மான்களை பிடிக்க முடியாமல், வனத்துறை அதிகாரிகள் திணறுகின்றனர்.

அமைச்சர் மற்றும் துறை உயர் அதிகாரிகள் தலையிட்டு, மான்களை பாதுகாப்பாக மீட்க உதவ வேண்டும் என, வன உயிரின ஆர்வலர்கள், கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## 'இயற்கை சூழல் இல்லை'

இது குறித்து, வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

அரசு வளாகம் மற்றும் தனியார் வளாகத்தில் வளரும் மான்களை, பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, வனத்துறைக்கு மட்டுமே உள்ளது. பொதுவாக, 10 மான்கள், துள்ளி குதித்து இயல்பாக வளர, 10 ஏக்கர் இடம் தேவை. மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தில், மரம் மற்றும் புல்வெளிகளை அழித்து, கட்டடங்கள் கட்டுகின்றனர்.

அங்கு, படிப்போர், மான்களுக்கு, தின்பண்டங்களை கொடுக்கின்றனர். மான்கள், இயற்கையோடு ஒன்றி வளரும் சூழல், அங்கு இல்லை.

இதனால், அவற்றை பிடித்து, அடர்த்தியான காடுகளில் விட, தமிழக அரசு உத்தரவிட்டது. அதற்காக, நிதியும் ஒதுக்கப்பட்டது. மத்திய தோல் ஆராய்ச்சி நிர்வாகம், உள்ளே விடாமல் அடம் பிடிப்பதால், மான்கள் உயிருக்கு ஆபத்து அதிகரித்து உள்ளது.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.



சி.எல்.ஆர்.ஐ., வளாகத்தில், காயமடைந்த நிலையில் மான்.

ஐ.ஐ.டி., கவர்னர் மாளிகை, சி.எல்.ஆர்.ஐ., உள்ளிட்ட வளாகங்களில், கட்டடங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இதற்காக, இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால், அங்கு வளரும் வன உயிரினங்களுக்கு, ஆபத்து ஏற்பட்டுள்ளது. சி.எல்.ஆர்.ஐ., நிர்வாகத்தின் செயல் தான் கண்டிக்கத்தக்கது. தமிழக அரசு தலையிட்டு, மான்களை காப்பாற்ற வேண்டும்.

வன உயிரின ஆர்வலர்கள்

# பலத்த காற்றில் இருந்து மரங்களை பாதுகாக்க

# அடர்த்தியான கிளைகளை வெட்ட முடிவு

Anna pg-1 06/09/15
தின மலர்

**சென்னை, செப். 6—**

மழையின்போது வீசும் பலத்த காற்றில் இருந்து, மரங்களை பாதுகாக்க, இலை அடர்த்தியான பக்க வாட்டு கிளைகளை வெட்ட, மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

சென்னையில், 'வர்தா' புயலின்போது, பல ஆயிரம் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால், சென்னையின் பசுமை குறைந்தது. ஒவ்வொரு பருவ மழையின் போதும், வீசும் பலத்த காற்றால், இலை அடர்த்தியாக நிற்கும் மரங்கள் தான், அதிகம் பாதிக்கப்படுகின்றன.

இருக்கும் மரங்களையாவது, பலத்த காற்றில் இருந்து பாதுகாக்க, பக்கவாட்டில் இருக்கும் இலை அடர்த்தியாக உள்ள சிறு கிளைகளை வெட்ட, மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இது குறித்து, மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

பலத்த காற்றடிக்கும் போது, இலை அடர்த்தியாக நிற்கும் மரங்கள் தான், அதிகம் பாதிக்கப்படுகின்றன.

மரத்தை சுற்றி காற்று சுழற்சி செய்வதால், மரங்கள் வலு விழக்க வாய்ப்புள்ளது. இதை தடுக்க, பக்கவாட்டில் அடர்த்தியாக இலை வளர்ந்துள்ள சிறு கிளைகளை வெட்ட முடிவு செய்துள்ளோம்.

இதனால், மரத்தை சுற்றி வீசும் காற்று சுழற்சி, இடைவெளி வழியாக வெளியேறி, மரம் அசைவது குறையும். இதன்மூலம், மரம் வலு விழப்பது தடுக்கப்படும்.

மழைக்காலம் முடிந்ததும், வெட்டிய இடத்தில், கிளையுடன் இலை வளர்ந்து பசுமை கொடுக்கும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.



# ஊருக்குள் கூட்டமாக வலம் வந்த காட்டெருமைகள்

கொடைக்கானல், செப்.6-

கொடைக்கானல் மலைப்பகுதியில் அதிகளவு காட்டெருமைகள் உள்ளன. இவை அடிக்கடி கொடைக்கானல் நகர் பகுதிக்குள் புகுந்து சுற்றுலா பயணிகளையும், பொதுமக்களையும் அச்சுறுத்தி வருகின்றன. நேற்று காலை 9 மணி அளவில், கொடைக்கானல் அப்சர்வேட்டரி அருகே உள்ள வி.ஜி.பி. லே அவுட் குடியிருப்பு பகுதிகளில் 10-க்கும் மேற்பட்ட காட்டெருமைகள் கூட்டமாக வலம் வந்தன.

இவை அருகில் உள்ள வீடுகளுக்குள் செல்ல முயன்றதால் அங்கிருந்தவர்கள் பீதி அடைந்தனர். சிலர், தங்களது வீடுகளில் கதவை பூட்டி கொண்டனர். பயத்தில் சிலர் கூச்சல் போட்டனர். சிறிது நேரம் அங்கேயே சுற்றித்திரிந்த காட்டெருமைகள், பின்னர் வனப்பகுதிக்குள் சென்று விட்டன. அதன்பிறகே அப்பகுதி மக்கள், சுற்றுலா பயணிகள் நிம்மதி அடைந்தனர். இதனிடையே அடிக்கடி நகர் பகுதிக்குள் நுழையும் காட்டெருமைகளை நிரந்தரமாக அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

விலங்குகள் பரிமாற்ற திட்டத்தில்

# வண்டலூர் பூங்காவுக்கு கங்கை நீர் முதலைகள்

## பீகாரில் இருந்து கொண்டு வரப்பட்டன

தாம்பரம், செப்.6-

விலங்குகள் பரிமாற்ற திட்டத்தில் பீகாரில் இருந்து வண்டலூர் பூங்காவுக்கு காண்டாமிருகம், கங்கை நீர் முதலைகள் கொண்டு வரப்பட்டன.

### ஆண் காண்டாமிருகம்

சென்னையை அடுத்த வண்டலூர் பூங்காவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரினங்கள் உள்ளது. இதனை தினமும் ஏராளமானோர் கண்டுகளித்து வருகின்றனர். இங்கு கடந்த 30 ஆண்டுகளாக காண்டாமிருகம் இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் அதிகாரிகளின் தீவிர முயற்சியின் காரணமாக ஐதராபாத்தில் உள்ள நேரு உயிரியல் பூங்காவில் இருந்து வண்டலூர் பூங்காவுக்கு 4 வயதுடைய ராமு என்ற ஒரு ஆண் காண்டாமிருகம் கடந்த ஆகஸ்டு மாதம் 2-ந்தேதி கொண்டு வரப்பட்டது.

### பீகாரில் இருந்து

தற்போது விலங்குகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் பீகார் மாநிலம் பாட்னா சஞ்சய்காந்தி உயிரியல் பூங்காவில் இருந்துலாரி மூலம் ஒரு பெண் காண்டாமிருகம் மற்றும் 3 கங்கைநீர் முதலைகள் வண்டலூர் பூங்காவுக்கு கொண்டு வரப்பட்டன. அவை நேற்று காலை வண்டலூர் பூங்காவுக்கு வந்து சேர்ந்தன.

சோர்வுடன் காணப்பட்ட அந்த காண்டாமிருகத்துக்கு புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. இதனையடுத்து காண்டாமிருகம் மற்றும் 3 கங்கை நீர் முதலைகளும் பூங்காவில் உள்ள விலங்குகள் மருத்துவமனை அருகில் உள்ள கூண்டுகளில் விடப்பட்டன. அவற்றை பூங்கா மருத்துவர்களும், ஊழியர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

### தொற்று நோய்கள்

மேலும் பாட்னாவில் இருந்து கொண்டுவரப்பட்ட காண்டாமிருகத்துக்கு ஏதேனும் தொற்று நோய்கள் இருக்கிறதா? என்பதையும் பூங்கா மருத்துவர்கள் பரிசோதித்து வருகின்றனர். தீவிர பரிசோதனைகள் முடிந்த பிறகு ஏற்கனவே பொதுமக்கள் பார்வைக்காக விடப்பட்டுள்ள ராமு என்ற காண்டாமிருகம் இருக்கும் இருப்பிடத்தில் இந்த பெண் காண்டாமிருகமும் மிக விரைவில் பொதுமக்கள் பார்வைக்காக விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒரு பெண் காண்டாமிருகம் மற்றும் 3 கங்கை நீர் முதலைகளுக்கு பதிலாக வண்டலூர் பூங்காவில் இருந்து பீகாரில் உள்ள பூங்காவுக்கு ஒரு ஜோடி வங்கப்புலி, சாம்பல் ஓநாய்கள், 10 வண்ண நாரைகள், 2 வெள்ளை மயில்கள், நெருப்புக்கோழிகள், மலைப்பாம்புகள் போன்றவற்றை வண்டலூர் பூங்கா நிர்வாகம் கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை கோழி
மொத்த வியாபாரிகள் சங்கம்
இன்றைய
மார்க்கெட் விலை
ஒரு கிலோ
ரூ. 73
